1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. சிகாமணி : மாணவர்களுக்கு ஆல் ரூட் பஸ் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனல் மாணவர்கள் நேரம் வீணுகிறது. குறிப்பிட்ட ரூட்டில் பாஸ் கொடுத்தால் நலமாகயிருக்கும் என்று பெற்ரேர்கள் கருதுகிருர்கள். இதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை நகரில் உள்ள மாணவர்களுக்கு ஆல் ரூட் பாஸ் என்று சொல்லப்படுகிற ரூபாய் 15 பாஸ் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் 52 இலட்சம் ரூபாய் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. அதோடு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே அவ்வப்போது சில சச்சரவுகளும் ஏற்படுகின்றன. அந்த பாஸ் கொடுக்கப்பட்டதன் நோக்கமே மாணவர்கள் நூலகங்களுக்கு அந்தப் பஸ்பாஸைபயன்படுத்த வேண்டும் என்று நல்ல நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது. நூலகத்திற்கு மட்டும் அந்தப் பாஸை பயன்படுத்துமாறு அதை திருத்தியமைப்பதுபற்றி அரசு பரிசீலித்துவருகிறது.

திரு. கே. சௌந்திரராசன் : சென்னை மாநகரில் இருக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற பஸ் பாஸ் போன்று பஸ் பாஸ்கள் கிராமப்புறங்களிலும் வழங்குவதற்கு உத்தேச முண்டா என்று அறியவிரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழ்நாட்டில் பெருநகரங்கள் பலயிடங்களில் அந்த முறை அமலில் இருந்து வருகிறது. கிராமப்புறங்களில் அதை நீட்டிப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம், இதனல் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்கல்.

*வின—603. திரு. ஆ. நடராசன் : மாண்புமிகுபோக்குவரத்துத் துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களை எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ?

(ஆ) மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும், தொழிலாளர்களை பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தந்தை பெரியார், அண்ணா, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன் (நகர்ப்பிரிவு), பல்லவன் (புறநகர்ப் பிரிவு), போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களை பங்குதாரர்களாக நடைமுறைப் படுத்தும் செயற் குறிப்பு இருந்து வருகிறது.

இணைப்புச் சாலைகள்.

* 604வினா—திரு.கோ.இளங்கோவன் :மாண்புமிகுபோக்குவரத் துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா:

(அ) இணைப்புச் சாலைகளை அமைத்துத் தருவோருக்கு ''Bus Route'' வழங்குகின்ற புதிய திட்டத்தின் கீழ் அமைத்த சாலைகளின் மொத்த தூரம் எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் உண்டாக்கப்பட்ட 'புதிய (Route) வழித்தடங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இத்திட்டம் அர சின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : இத்திட்டத்தை அறிவித்து மாதங் கள் பல ஆகிவிட்டன. என்றாலும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்போது பரிசிலனை முடியும்? எப்போது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராமப்புறங்களிலும் பொது மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அரசாங்கத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ மூவாயிரத்துக்கு மேற்பட்ட கிராமப்புறச் சாலைகளை செப்பனிடுவதற்கும் அந்தச் சாலைகளில் பேருந்துகள் செல்கிற வகையிலும் நல்ல முறையில் கொண்டு வருவதற்கு ஏராளமான பொருள்செலவு தேவையாக இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் சாலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்குகிற நேரத்தில் கோர் செக்டார் என்ற பிரிவில் ஒதுக்காமல் இருப்பதால் நிதித் தட்டுப்பாடு மாநில அரசுக்கு மிகுதியாகிறது.

ஆகவே, பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் சாலைகளை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்லநோக்கோடு செயல்முறைக்கு கொண்டுவர ஒரு குறிப்பினை நடைமுறைப்படுத்த இருக்கிறது. பன்றிமலைப் பகுதியில் 12 மீட்டர்க்கு சாலை அமைக்க ஒரு தனியார் முன்வந்து,